# ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கும் விதவைகள் எதிர்கொள்ளும் உளவியற் பிரச்சினைகள்

தக்ஷாயினி இ, செல்வராஜா மா

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் மொத்தமாக 18,587 விதவைகள் காண்ப்படுகின்றனர். இந்த 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அதிகமான விதவைகளைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவாக ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு காணப்படுகின்றது. இங்கு சுமார் 2731 பெண்கள் விதவைகளாக உள்ளனர். இப்பிரதேச செயலாளர் பிரிவில் 38 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றில் அதிக விதவைகளைக் கொண்ட கிராம சேவையாளர் பிரிவாக ஆறுமுகத்தான் குடியிருப்பு உள்ளது. இக்கிராமம் பொருளாதார ரீதியாகப் பின்னடைந்த கிராமமாகும். இங்கு வாரும் மக்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாக உள்ளனர். இதன் காரணமாக இக்கிராமத்தில் வசிக்கும் விதவைகள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றுள் பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இவர்களது உளவியற் பிரச்சினைகள் உள்ளன. இதனடிப்படையில் விதவைகள் எதிர்கொள்ளும் உளவியற் பிரச்சினைகளை எடுத்தியம்புவதாக இவ்வாய்வு முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் மூலம் இக்கிராமத்தில் வசிக்கும் விதவைகளிடத்தே ஏற்படும் உள ரீதியான பிரச்சினைகள், அவர்களிடத்தே இப்பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் காரணிகள் என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இக்கிராமத்திலுள்ள விதவைகள் எதிர்நோக்கும் உளவியற் பிரச்சினைகளாக ஒதுங்கியிருத்தல், தற்கொலை எண்ணம், தாழ்வுணர்ச்சி, உளநலம் குன்றுதல், பயம், பாதுகாப்பின்மை, தைரியமின்மை, என்பன இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டன. ஊளவியற் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் காரணிகளாக சமூகம், பண்பாடு, கலாச்சார ரீதியான சடங்கு சம்பிரதாயங்களிலுள்ள அதீத நம்பிக்கை, பெற்றோர், சூழல், குடும்பம் என்பன இனங்காணப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** விதவைகள், உளவியல் பிரச்சினைகள், சமூகம்

*Department of Education, Eastern University, Sri Lanka. Email: thaksha53@yahoo.com*
*Department of Education and Early Childcare, Eastern University, Sri Lanka*